டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 159 3.12.2025 WEDNESDAY KARTHIGAI : 16 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 159 3.12.2025 புதன்கிழமை கார்த்திகை : 16 விலை : ரூ.5/-

3 தமிழ் மொழியின் சிறப்பை எடுத்து சொல்லும் காசி தமிழ்

4 திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து தரவேண்டும் : மேயர் தினேஷ் குமார்

2 நா.த.க., வேட்பாளர்கள் வரும் பிப்., 21ல் அறிவிப்பு

# துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் : அதிகாரிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி அறிவுறுத்தல்!

சென்னை, டிச.3-

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வடதமிழகம் புதுவை தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளில், நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நேற்றில் இருந்து சென்னையில் கனமழை பெய்து வருகிறது. இதனால், தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கியுள்ளது. இதை உடனே வெளியேற்றும் பணியில் சென்னை மாநகராட்சி ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எம்.கே.பி நகர் முல்லை நகர் பகுதியில் மழை நீரை வெளியேற்றும் பணியினை ஆய்வு செய்தார்.

அப்போது, மழையால் பொதுமக்கள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் உடனுக்குடன் செய்ய வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதேபோல் கோடம்பாக்கம் ரங்கராஜபுரம் பகுதியில் ஆய்வு செய்து, விவரங்களை அதிகாரிகளிடம் துணை முதலமைச்சர் கேட்டறிந்தார்.

இதற்கு முன்னதாக, மழைத்தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு செய்தார். அப்போது, மழை நேரத்தில் மக்கள் பாதிப்பைச் சந்திக்காத வண்ணம் துரிதமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு துணை முதலமைச்சர் அறிவுறுத்தினார்.






■ மதுரை புறநகர் மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதி அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் செயல் வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் பொதுச் செயலாளர் T.T.V.தினகரன் தலைமையில் நடைப்பெற்றது. அருகில் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 முன்னிட்டு, திருப்பூர் மாநகராட்சி பாண்டியன் நகர் பகுதியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



■ மதுரை மாவட்டம், நீர்வளத்துறையின் மூலம் வடக்கு வட்டம், செல்லூர் கண்மாயின் பந்தல்குடி கால்வாயில் பக்கவாட்டு வெள்ள தடுப்புச் சுவர் (இடது புறம் கழுங்குலிருந்து இருந்து வைகை ஆறு வரை) மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் சாம்இரவின், செயற்பொறியாளர் சிவபிரபாகர் ஆகியோர் உடன் உள்ளனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## வாக்காளர் பட்டியலில் தங்களை இணைக்க பேரூராட்சி அலுவலகத்திற்கு வாக்காளர் படிவத்துடன் குவிந்த பொதுமக்கள்

### 7, 18, 6, 12வது வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் 50 பேர் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து மனுக்களை கொடுத்தனர்

சின்னாளபட்டி, டிச.03

வாக்காளர் பட்டியலில் தங்களை இணைக்க 7, 18, 6, 12வது வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் 50 பேர் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து மனுக்களை கொடுத்தவண்ணம் இருந்தனர்.

ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 22 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கம் என அமைச்சர் ஐ.பெரியசாமி அதிரடியாக குற்றச்சாட்டியதை அடுத்து சின்னாளபட்டியில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் பி.எல்.ஓ, பி.எல்.2 தேர்தல் பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 7வாக்குச்சாவடி மைய பில்.ஏ.ஓக்களுக்கு களஆய்வு அலுவலர்கள் நியமனம் செய்து வாக்காளரை சேர்க்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டர். அதன்படி கள ஆய்வாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்துவரும் நிலையில் 18, 7, 6, 12, 9, 10 ஆகிய வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் 50 பேர் வாக்காளர் பட்டியலில் தங்களை இணைக்கவில்லை என்றும், கள ஆய்வுக்கு முறையாக வராத பி.எல்.ஓக்கள் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு



சென்றுவிட்டதாக கூறி தங்கள் வாக்காளர் படிவத்தை பெறவில்லை என்றும், திட்டமிட்டு தங்களை புறக்கணிப்பதாகக் கூறி பேரூராட்சி அலுவலத்திற்கு வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். அதன் பின்னர் பேரூராட்சி அலுவலக மாடியில் வாக்காளர் படிவத்தை பெறும் பகுதிக்கு சென்று வாக்காளர் படிவங்களை கொடுத்துவிட்டு சென்றனர். பொதுமக்கள் வாக்காளர் படிவத்துடன் பேரூராட்சி அலுவலத்தில் குவிந்து வருவதைப் பார்த்த வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் பி.எல்.ஓக்கள் கள ஆய்வுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இது குறித்து வி.எம்.எஸ் காலனியைச் சேர்ந்த மல்லிகா (35) கூறுகையில் நாங்கள் தேவி கருமாரியம்மன் கோவில் அருகே 30 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறோம். எங்களிடம் விண்ணப்ப படிவத்தை கொடுக்கவோ, அல்லது வாங்கவோ யாரும் வரவில்லை. தன்னார்வளர்கள்தான் எங்களிடம் வந்து வாக்காளர் படிவத்தை கொடுத்தார்கள். எங்கள் வாக்குரிமையை காப்பாற்றுவதற்காக பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து நேரடியாக பி.எல்.ஓவிடம் மனு கொடுக்க வந்துள்ளோம் என்றார்.

மேட்டுப்பட்டி ஏ.கே.எஸ். தெருவைச் சேர்ந்த ஆர்.மாலு (28), கூறுகையில் விண்ணப்ப படிவத்தை வாங்குவதற்கு எந்தவொரு அதிகாரியும் வரவில்லை. எங்கு கொடுப்பது என்று தெரியவில்லை. அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்களுக்காக எங்களின் வாக்குரிமையை நிலைநாட்டுவதற்காக அவர் பேசியபின்புதான் அதிகாரிகள் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து கொடுங்கள் என கூறினார்கள். அதனால் நாங்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து நேரடியாக மனு கொடுத்துள்ளோம் என்றார். இதுபோல 18வது வார்டு, முத்தமிழ் நகர், பழைய மின்சார அலுவலகம் எதிர்புறம் தெரு, திருநகர் காலனி பகுதியில் வசிப்பவர்களை வெளியூர் மற்றும் வெளிமாவட்டங்களில் வசித்து வருகிறார்கள் என கூறி வாக்காளர் படிவத்தை விநியோகம் செய்யாமல் இருந்துள்ளனர். கடந்த 2 நாட்களாக அவர்களைத் தேடிச் சென்று வாக்காளர் சேர்க்கை படிவத்தை கொடுத்துள்ளனர். இதுபோல 18 வார்டுகளிலும் பி.எல்.ஓக்கள் சரிவர தங்களுடைய களப்பணியை செய்யாததால் நூற்றுக் கணக்கானோருக்கு தங்களுடைய வாக்குரிமை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## பாலமேடு பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி சார்பில் அலுவலகத்தில் ஜல்லிக்கட்டு காளையின் நினைவுச் சிலை வடிவம் திறப்பு

அலங்காநல்லூர் டிச.03

மதுரை மாவட்டம் பாலமேட்டில், கிராமத்தின் பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும். பிரதிபலிக்கும் வகையில், கிராம பொதுமகாலிங்கசுவாமி மடத்து கமிட்டி சார்பில், அலுவலகத்தில் ஜல்லிக்கட்டுக் காளையின் நினைவுச் சிலை வடிவம் திறந்து வைக்கப்பட்டது. இதில் வீரர் ஒருவர் முரட்டு காளையின் கொம்பை பிடித்து அடக்குவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு, மடத்துக் கமிட்டியின் தலைவர் மச்சவேல், செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக் ,ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மடத்து கமிட்டி நிர்வாக குழு உறுப்பினர்கள், கிராம பொதுமக்கள் என பலர் பங்கேற்றனர்.தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில்,



வருகின்ற ஜனவரி 16.ம் தேதி ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை சிறப்பாக நடத்துவது, குறித்து முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. பாரம்பரியமிக்க இந்தப் போட்டி, பாலமேட்டில் உள்ள மஞ்ச மலைசுவாமி ஆற்றுத் திடலில் நடைபெறும்.

# கரூர் சம்பவத்தில் சிபிஐ விசாரணையை ரத்து செய்ய வேண்டும் சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல்

சென்னை. டிச.3-

கரூர் சம்பவத்தில் சிபிஐ விசாரணையை ரத்து செய்ய வேண்டும் என சுப்ரீம்கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது.

கரூரில் த.வெ.க., தலைவர் விஜய் மேற்கொண்ட பிரசார கூட்டத்துக்கு வந்தோரில் 41 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். இந்த வழக்கை விசாரிக்க, ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் ஆணையத்தை நியமித்தது. பின்னர், சென்னை ஐகோர்ட் சிறப்பு குழு அமைத்து உத்தரவிட்டது. தவெக தரப்பு சுப்ரீம்கோர்ட்டினை அணுகி, சிபிஐ விசாரணை நடத்த கோரியிருந்தது. பின்னர் சுப்ரீம்கோர்ட் அனுமதி அளித்து உத்தரவிட்டது.

தற்போது சிபிஐ அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சூழலில், சிபிஐ விசாரணையை ரத்து செய்ய வேண்டும் என சுப்ரீம்கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது.மனுவில் தமிழக அரசு கூறியிருப்பதாவது: கரூர் கொடுந்துயரம் தொடர்பாக, சென்னை ஐகோர்ட் அமைத்த சிறப்பு புலனாய்வுக் குழுவின் விசாரணையை மீண்டும் தொடர அனுமதிக்க வேண்டும்.

அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தின் விசாரணையை மீண்டும் நடத்தும் வகையில் உத்தரவிட வேண்டும். இந்த வழக்கில் சிபிஐ விசாரணையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு தமிழக அரசு கூறியுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# 2ம் நாள் கூட்டத்தொடர்; எதிர்க்கட்சிகள் அமளியால் முடங்கியது பார்லி



புதுடில்லி, டிச.3-

புதுடில்லிபார்லிமென்ட் 2ம் நாள் கூட்டத்தொடரில் இன்று (டிச.,02) எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியால் லோக்சபா, ராஜ்யசபா ஆகிய இரண்டு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

பார்லி.,யின் குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (டிச.,01) துவங்கியது. வரும் 19ம் தேதி வரை நடக்கும் இந்த கூட்டத் தொடரில், முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால், செங்கோட்டையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம், புதிய தொழிலாளர் சட்டங்கள், எஸ்.ஐ.ஆர்., விவகாரம் ஆகியவற்றை விவாதிக்க வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் முதல் நாளே சபையை முடக்கினர்.

இந்நிலையில் 2வது நாள் கூட்டத்தொடர் காலை 11 மணிக்கு தொடங்கியது. லோக்சபா கூடியதும் எஸ்ஐஆர் பணி குறித்து விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் ஓம்பிர்லா பலமுறை எச்சரித்தும் கேட்கவில்லை. அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. அவையை மதியம் 2 மணி வரை ஓம்பிர்லா ஒத்திவைத்தார்.

ராஜ்யசபா

அதேபோல், ராஜ்யசபாவை இன்று (டிச.,02) துணை ஜனாதிபதியாக பதவியேற்ற சி.பி.ராதாகிருஷ்ணன் 2வது நாளாக நடத்தினார். எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம்

முன்னதாக, பார்லி வளாகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தப்பணியை (எஸ்ஐஆர்) கண்டித்து, இண்டி கூட்டணி எம்பிக்கள் ஆர்பாட்டம் நடத்தினர். இதனால், பார்லிமென்ட் வளாகத்தில் பரபரப்பான சூழல் நிலவியது.

# முதல்வர் தொகுதியில் 10 ஆயிரம் ஓட்டு இறந்தவர்களின் பெயரில் உள்ளது: நயினார் நாகேந்திரன் பேட்டி



தென்காசி.டிச.3-

தென்காசி: முதல்வர் ஸ்டாலின் தொகுதியில் பத்தாயிரம் ஓட்டு இறந்தவர்களின் பெயரில் உள்ளது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தென்காசியில் தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது: வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் இபிஎஸ் தலைமையில் மக்களின் ஆதரவுடன் சிறந்த ஆட்சி அமையும். எஸ்ஐஆர் ஐ வைத்து திமுகவினர் மக்களை குழப்பி, அவர்கள் தமது வேலைகளை பார்த்து வருகின்றனர். பீஹாரில் 65 லட்சம் ஓட்டுக்கள் நீக்கப்பட்டது போல், தமிழகத்தில் சுமார் 75 லட்சம் ஓட்டுக்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என தெரிய வருகிறது.

இதில் 2002க்கு பின்னர் இறந்தவர்களின் ஓட்டுக்களே இருக்கும். உதாரணமாக தமிழக முதல்வர் ஸ்டாலின் நின்று வெற்றி பெற்ற கொளத்தூர் தொகுதியில் மட்டும் 10 ஆயிரம் ஓட்டுக்கள் இறந்தவர்களின் பெயரில் உள்ளது. அதனை நீக்குவதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# கட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கிய 'கட்அவுட்' விஜய்: த.வெ.க. காமெடி



மதுரை, டிச.3-

மதுரையில் த.வெ.க., உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை 'கட் அவுட்' வடிவில் வந்து தலைவர் விஜய் வழங்கினார். 'அவருடன்' குரூப் போட்டோ எடுத்து உறுப்பினர்கள் மகிழ்ந்தனர்.

மதுரை த.வெ.க., தெற்கு மாவட்டம் சார்பில் பகுதி, வார்டு நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் விழா நேற்றுமுன்தினம் ஜெய்ஹிந்த்புரத்தில் நடந்தது. மாவட்ட செயலாளர் தங்கபாண்டி வழங்கினார்.

இதில் கட்சி தலைவர் விஜய்யும் 'கட் அவுட்' வடிவில் பங்கேற்றார். இது தொடர்பாக சமூகவலைதளத்தில் அக்கட்சி உறுப்பினர்கள் 'விஜய் போன்ற பொம்மை உருவப்பட முன்னிலையில் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது' என பதிவிட்டிருந்தனர்.

இது குறித்து வலைதளத்தில் 'இந்திய அரசியல் வரலாற்றிலேயே 'கட் அவுட்' மூலம் அடையாள அட்டை வழங்கிய கட்சி த.வெ.க., மட்டும்தான். ஏ.ஐ., தொழில்நுட்பம் உள்ள இக்காலத்தில் இன்னும் 'கட்அவுட்டா'. இதற்கு இல்லையா 'கெட் அவுட்' என 'நெட்டிசன்கள்' கேலியும், கிண்டலும் செய்து வருகின்றனர்.

நிர்வாகிகள் கூறுகையில், 'கட்சியின் வளர்ச்சி பிடிக்காமல் தி.மு.க., தூண்டுதலில் இதுபோன்ற கருத்துகளை சமூகவலைதளத்தில் பதிவிட்டு வருகின்றனர். 'கட் அவுட்' கலாசாரத்திற்கு வழிகாட்டியதே தி.மு.க., தானே. விஜய் எந்த வடிவில் வந்தால் என்ன. எங்களை பொறுத்தவரை அவரே நேரில் வந்து வழங்கியதாக கருதுகிறோம். இது எங்களுக்கு பெருமையும்கூட,' என்றனர்.

# தமிழ் மிகவும் உன்னதமான மொழி: கவர்னர் ரவி புகழாரம்



சென்னை. டிச.3-

நாகலாந்து மற்றும் அசாம் மாநிலங்கள் உருவான தினம், நேற்று கவர்னர் மாளிகையில் சிறப்பிக்கப்பட்டது.

இதில், கவர்னர் ரவி பேசியதாவது:

நாகாலாந்து, அசாம் மாநிலங்கள் உருவான தினத்தை, பிரதமர் மோடியால், தமிழகத்தில் சிறப்பித்து வருகிறோம். சுதந்திரத்திற்கு பின், பல மாநிலங்கள் உருவானதன் வாயிலாக, நாட்டின் பன்முக தன்மை குறித்து பிற மாநிலங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது. மாநிலங்களை கொண்டாடும் போது, அவரவர் தனித்துவ கலாசாரம் கொண்டவர்கள் என்பதை உணர வேண்டும்.

பல மரங்கள் கொண்ட தோட்டம் எப்படி அழகாக இருக்குமோ, அதேபோல், பல மாநிலங்களின் தோட்டமாக இந்தியா விளங்குகிறது. கலாசாரத்தில் வேறுபாடு கொண்டதாக இருந்தாலும், ஒரே சிந்தனை கொண்டவர்களாக இருப்பது அவசியம். அசாம், தமிழகம் இடையே நீண்ட தொடர்பு உள்ளது.

நாம் கடந்த காலங்களை மறந்து வாழ்கிறோம். சங்கர்தேவ், சைதன்ய மகாபிரபு போன்ற ஆன்மிக தலைவர்களால் மாநிலங்களில் பக்தி பரவியது. அதே குரலாக, ஒரே பாரதம், உன்னத பாரதம் என்று சொல்லும்போது ஒரு உத்வேகம் கிடைக்கிறது.

தமிழ் மிகவும் உன்னதமான மொழி. தமிழ் மொழி, கலாசாரம் பிற மாநில மக்களிடம் கலப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கவர்னர் மாளிகை, குவஹாத்தி பல்கலை இணைந்து தமிழ் டிப்ளமோ படிப்பு துவங்கியது. பனாரஸ் இந்து பல்கலைகளில் ஏற்கனவே தமிழ் பாடத்திட்டம் உள்ளது. அங்கு தமிழ் கற்ற மாணவர்கள் இங்கு வந்துள்ளனர்.

தமிழ் மொழியை பிற மாநிலத்தவர் கற்பதில் இருக்கும் ஆர்வத்தை பார்க்கும்போது, மாநிலங்கள் இடையே ஆரோக்கியமான உரையாடல் வெளிப்படும். நாகாலாந்து அழகான மாநிலம். தமிழக மக்கள் நாகாலாந்து சென்று அங்குள்ள மக்களுடன் உரையாட வேண்டும். 10 நாட்கள் கொண்டாட்டத்தில், அவர்கள் கலாசாரம், உணவு, உபசரிப்பு போன்ற பல அம்சங்களை பார்க்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை அசாம் அசோசியேஷன் தலைவர் கவுதம் டியோரி, சென்னை வடகிழக்கு மாநில நலச்சங்க தலைவர் வாபன்கோஹ்ரீ, கவர்னரின் செயலர் கிர்லோஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 'பஸ் டிரைவரின் பணி நேர கட்டுப்பாடுகளை தளர்த்தணும் : த.மா.கா., தலைவர் வாசன் வலியுறுத்தல்



சென்னை, டிச.3-

'பஸ் டிரைவர்களின் பணி நேரக் கட்டுப்பாடுகளை, அரசு போக்குவரத்து நிறுவனங்கள் தளர்த்த வேண்டும்' என, த.மா.கா., தலைவர் வாசன் வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கை: சிவகங்கை மாவட்டம் திருப்பத்துார் அருகே, அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில், 11 பேர் உயிரிழந்துள்ளனர். சமீபகாலமாக பஸ் விபத்துகள் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது.

அரசு பஸ் டிரைவர்களுக்கு பணி நேரக் கட்டுப்பாடுகளை, அரசு போக்குவரத்து கழகங்கள் தளர்த்த வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கான நிவாரணத்தை, 10 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

வாசன் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில், 'டிட்வா புயல் தாக்கத்தால், பல்வேறு மாவட்டங்களில், பரவலாக கன மழை பெய்து, விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கி பெரும் சேதம் அடைந்துள்ளன.

'விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க, பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனே ஆய்வு செய்து, ஏக்கருக்கு, 35,000 ரூபாய் இழப்பீடாக வழங்க வேண்டும்' என கூறியுள்ளார்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 சரிவு: ஒரு சவரன் ரூ.96,320



சென்னை. டிச.3-

சென்னையில் இன்று (டிச.,02) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.96,320க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை, 22 காரட் ஆபரண தங்கம், கிராம் 11,980 ரூபாய்க்கும், சவரன் 95,840 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 192 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமை, தங்கம் சந்தைக்கு விடுமுறை. அன்று, முந்தைய நாள் விலையில் ஆபரணங்கள் விற்பனையாகின.

ற்று, தங்கம் விலை கிராமுக்கு 90 ரூபாய் உயர்ந்து, 12,070 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 720 ரூபாய் அதிகரித்து, 96,560 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில் இன்று (டிச.,02) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.96,320க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு ரூ.30 குறைந்து ஒரு கிராம் ரூ.12,040க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிராம் வெள்ளி விலை 196 ரூபாய்க்கு விற்பனை ஆகி வருகிறது. சில வாரங்களுக்கு பின் மீண்டும் தங்கம் விலை கிராம் 12,000 ரூபாயையும், சவரன் 96,000 ரூபாயையும் தாண்டி, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# நா.த.க., வேட்பாளர்கள் வரும் பிப்., 21ல் அறிவிப்பு



சென்னை, டிச.3-

'சட்டசபை தேர்தலுக்கான வேட்பாளர்கள், 2026 பிப்., 21ல் அறிவிக்கப்படுவர்' என, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நா.த.க., சார்பில், கடலம்மா மாநாடு, ஆடு, மாடு மாநாடு, மலை மாநாடு என நடத்தப்பட்டு வருகிறது. மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு, 2026 பிப்., 21ம் தேதி திருச்சியில் நடைபெற உள்ளது.

அதில், 234 தொகுதிகளுக்கான நா.த.க., வேட்பாளர்களை, ஒரே மேடையில் அறிவிக்க உள்ளதாக சீமான் தெரிவித்தார்.



# ஈரோடு மாவட்டம் கோபியில் தொண்டர் குடும்பத்துக்கு பழனிசாமி ரூ.10 லட்சம் நிதி

ஈரோடு, டிச.3-

ஈரோடு மாவட்டம் கோபியில் நேற்று முன்தினம் இரவு அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி பங்கேற்ற கூட்டத்துக்கு வந்த, கொண்டையம்பாளையத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தொண்டரான கட்டட தொழிலாளி அர்ஜுனன் உயிர் இழந்தார்.

அவரது உடல், பிரேத பரிசோதனைக்கு பின், அவரது தாய் மாகாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று , அர்ஜுனன் உடலுக்கு பழனிசாமி அஞ்சலி செலுத்தினார் . பின்னர், மாகாளிக்கு ஆறுதல் தெரிவித்து, 10 லட்சம் ரூபாய்க்கான வரைவோலையை வழங்கினார்.

மேலும், ''தலைமை கழகம் வாயிலாக, இன்னும் 10 லட்சம் ரூபாய் வழங்குவோம்,'' என தெரிவித்தார்.

# பழனிசாமி கனவு நிறைவேறியது: த.வெ.க., செங்கோட்டையன் கருத்து



சென்னை:. டிச.3-

''அ.தி.மு.க.,விலி ருந்து என்னை வெளியேற்ற வேண்டும் என்ற, பழனிசாமியின் கனவு நிறைவேறியது,'' என, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார். சென்னையில் அவர் அளித்த பேட்டி:

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவுரைப்படியே நான் த.வெ.க.,வில் இணைந்துள்ளதாக துணை முதல்வர் உதயநிதி சொல்லி இருக்கிறார்.

அது அவர் கருத்து. ஆனால், சுய சிந்தனையின் பேரில் எனக்கு தேவையான முடிவை எடுத்திருக்கிறேன். இதில் யாருடைய நிர்பந்தமும் இல்லை.

துாய்மையான ஆட்சியை எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தலைமையில் பின்பற்றினோம். அதனால்தான், எம்.ஜி.ஆர் இருக்கும் வரை, அவரை யாராலும் வெல்ல முடியவில்லை. ஜெயலலிதா, ஐந்து முறை முதல்வராக இருந்தார். ஆனால், கடந்த 2021ம் ஆண்டு பழனிசாமிக்கு, மக்கள் என்ன பதில் கொடுத்தனர் என்பது அவருக்கே தெரியும்.நேற்று முன்தினம் கோபியில் பழனிசாமி நடத்திய பொதுக்கூட்டம் குறித்து, நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எங்கிருந்தெல்லாம் ஆட்கள் கூட்டி வரப்பட்டனர் என்பது கோபி மக்களுக்கு தெரியும்.

அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காகவே, பன்னீர்செல்வம், தினகரனிடம் பேசினேன். என்னை கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பது, பழனிசாமி ஆசை. கச்சிதமாக அதை செய்துள்ளார்.இவ்வாறு அவர் கூறினார்

# வீட்டுமனை விற்பனையில் வெளிப்படைத்தன்மை இல்லையே; வீட்டுவசதி வாரியம் மீது குற்றச்சாட்டு



மதுரை. டிச.3-

தமிழக அரசு வீட்டுவசதி வாரியம்சார்பில் வீடு இல்லாதோருக்கு வீட்டு மனைகள், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் விற்பனை செய்யப்படுகிறது. தமிழகம் முழுவதும் விற்பனையாகாத வீடுகளுக்கும் விண்ணப்பங்களை பெறுகின்றனர். மதுரையை பொறுத்தவரை தோப்பூர், உச்சபட்டி, எல்லீஸ் நகர், தத்தனேரி பகுதிகளில் வீட்டு மனை விற்பனைக்கான பணிகள் நடக்கின்றன.

காரணமின்றி நிராகரிப்பு வீட்டுமனை விற்பனையில் குறைந்த, நடுத்தர, உயர் வருமான பிரிவு என்ற அடிப்படையில் விண்ணப்ப கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. முதலில் வருவோருக்கு முன்னுரிமை உண்டு. வெளிப்படைத் தன்மைக்காக, ஆன்லைன் மூலம் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்கின்றனர். தகுதியான விண்ணப்பங்களை பொது இடத்தில் வைத்து ஆன்லைன் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கின்றனர்.

விண்ணப்பதாரர் ஒருவர் கூறியதாவது: தேர்வு செய்யப்படுவோர், முன்பணத்தை ஆன்லைன் மூலமே செலுத்த முடியும் என்றநிபந்தனையால் எளிய மக்கள் வீடு பெறும் வாய்ப்பு குறைகிறது. விதிமுறை பின்பற்றாத, உரிய ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. நிராகரிக்கும்போது அதற்கான காரணத்தை விண்ணப்பதாரர்களுக்கு வீட்டு வசதி வாரியம் தெரிவிப்பது இல்லை.

அதனால் ஆன்லைனிலும் நிராகரிப்பு காரணத்தை அறிய முடிவதில்லை. குறைபாடுகள் இருந்தால் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவித்து மீண்டும் அதனை பதிவேற்றம் செய்யலாம் என்பதே நடைமுறை. ஆனால் வீட்டுவசதி வாரியம் இதை கடைபிடிப்பதில்லை. இதனால் வெளிப்படைத் தன்மையும் கேள்விக்குறியாகிறது என்றார்.

வீட்டுவாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், ''ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை தொடக்க நிலையில் தான் உள்ளது. இந்த ஆண்டு செப்டம்பர் முதலே இதற்கான குறைகளை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம். விரைவில் பொதுமக்களின் குறைகள் சரிசெய்யப்படும்'என்றார்

# மது அருந்துவதால் ஏற்படும் விபத்தில் ஆண்டுக்கு 2,98,000 பேர் மரணம்; உயர்நீதிமன்றம் அதிருப்தி

மதுரை, டிச.3-

மது அருந்துவதால் ஏற்படும் சாலை விபத்துக்களில் ஆண்டுக்கு 2 லட்சத்து 98 ஆயிரம் பேர் இறக்கின்றனர். இவர்களில் 1 லட்சத்து 56 ஆயிரம் பேர் மது அருந்தாத அப்பாவிகள் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளதாக அறிவுறுத்திய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, ராமநாதபுரம் மாவட்டத்தில் டாஸ்மாக் கடையை மூட போராடியவர்களுக்கு எதிராக பதிவான வழக்கை ரத்து செய்தது.



ராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் அருகே நாடார்வலசையிலுள்ள டாஸ்மாக் கடையை மூடக் கோரி, பாதையை மறித்து அனுமதியின்றி போராட்டம் நடத்தியதாக பக்ருதீன் உள்ளிட்ட சிலர் மீது தேவிபட்டினம் போலீசார் வழக்கு பதிந்தனர். இதை ரத்து செயயக்கோரி பக்ருதீன், செல்வி உள்ளிட்ட 10 பேர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார்.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் யாசர் அராபத்: குடியிருப்பு பகுதியில் டாஸ்மாக் அமைந்துள்ளது. மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. மனுதாரர்கள் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர். வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்றார்.

நீதிபதி பிறப்பித்த உத்தரவு: மது அல்லது வேறு எந்த போதை தரும் பானங்களையும் உட்கொள்வது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். மருத்துவ நோக்கங்களுக்கானதைத் தவிர, ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் போதை தரும் பானங்களை உட்கொள்வதை தடை செய்ய மாநில அரசை இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. நாட்டிலேயே முதன்முதலில் மதுவிலக்கை அமல்படுத்தியது தமிழக அரசுதான். 1937 ல் தமிழகத்தில் மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்டு 1971 வரை தொடர்ந்தது. சட்டவிரோத சாராயத்தால் ஏற்படும் மரணங்களைத் தடுக்கும் நோக்கில் டாஸ்மாக் 1983ல் துவக்கப்பட்டது. இது பாராட்டத்தக்க நோக்கத்துடன் நிறுவப்பட்டாலும், அரசுக்கு வருவாய் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளது. மனிதர்களின் ஆரோக்கியத்தில் மதுவின் பிற விளைவுகளை பொருட்படுத்தாமல் அரசால் ஆதரிக்கப்படுகிறது. சட்டவிரோத சாராயத்தால் ஏற்படும் மரணங்களை தடுக்கும் நோக்கில் இந்நிறுவனம் துவக்கப்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சமீபத்தில் சட்டவிரோத சாராயத்தை உட்கொண்டதால் 66 பேர் இறந்தனர். மது அருந்துவதால் உடலுறுப்புகள் பாதிக்கிறது. இதனால் அதிக மருத்துவச் செலவுகள் ஏற்படுகின்றன. இது மது அருந்துபவர்களின் ஆரோக்கியத்தில் மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தினர், மற்றவர்களின் ஆரோக்கியத்திலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. மது குரூப் 1 வகை புற்றுநோயை உண்டாக்கும் ஊக்கியாக உள்ளதாக சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மது அருந்துவதால் ஏற்படும் சாலை விபத்துக்களால் ஆண்டுக்கு 2 லட்சத்து 98 ஆயிரம் பேர் இறக்கின்றனர். இவர்களில் 1 லட்சத்து 56 ஆயிரம் பேர் மது அருந்தாத அப்பாவிகள் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. 2019ல் குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் 3322 மரணங்கள், 7845 பேர் காயமடைந்தனர். இது 2021 ல் அதிகரித்து 4201 மரணம், 8809 பேர் காயமடைந்ததாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குடிப்பழக்கத்தால் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குடும்ப வன்முறை அதிகரித்துள்ளது. இந்தியாவில் 32 சதவீதம், தமிழகத்தில் 40 சதவீத பெண்கள் கணவர்களிடமிருந்து குடும்ப வன்முறையை எதிர்கொள்கின்றனர். இந்தியாவில் 2021 ல் 1 லட்சத்து 64 ஆயிரத்து 33 தற்கொலைகள் பதிவாகியுள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்துள்ளது. 6.4 சதவீத தற்கொலைகளுக்கு போதைப்பொருள் / மது போதை காரணம். இந்தியாவில் 5.7 கோடிக்கும் அதிகமான மக்கள் தீங்கு விளைவிக்கும் அல்லது மது பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது அரசின் கடமை என இந்திய அரசியலமைப்பு வலியுறுத்துகிறது. மது அருந்துவதால் 26 லட்சம் பேர் இறந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் 2019 ல் தெரிவித்துள்ளது. வழிபாட்டுத் தலங்கள் அல்லது கல்வி நிறுவனங்களுக்கு அருகில் டாஸ்மாக் கடையை நிறுவக்கூடாது என அரசின் விதி கூறுகிறது. மற்றவர்கள் மது அருந்துவதால் பாதிக்கப்படும் மனுதாரர்களுக்கு, தங்கள் பகுதியிலுள்ள டாஸ்மாக் கடை குறித்து அரசிடம் கேள்வி கேட்க உரிமை உண்டு. மக்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் அரசின் எந்தவொரு கொள்கை முடிவும் மக்களால் கேள்விக்குள்ளாக்கப்படும். அமைதியாக எதிர்ப்பு தெரிவிக்க அனைத்து குடிமக்களுக்கும் உரிமை உண்டு. அதை குற்றம் என கூற முடியாது. மனுதாரர்களுக்கு எதிராக பதிவான வழக்கு அடிப்படையில் நடவடிக்கைகளைத் தொடர அனுமதிப்பது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும். வழக்கு ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டார்.

# தமிழ் மொழியின் சிறப்பை எடுத்து சொல்லும் காசி தமிழ்

சென்னை, டிச.3-

'தமிழின் பெருமையை உலகெங்கும் ஓங்கி ஒலித்து வரும் பிரதமர் மோடி, இந்த ஆண்டு காசி தமிழ் சங்கமம் வாயிலாக, மற்ற மாநில மக்கள் தமிழ் கற்கவும், தமிழ் மொழியின் சிறப்பை உணரும் வாய்ப்பை பெறவும் நடவடிக்கை எடுத்துள்ளார்' என மத்திய அமைச்சர் முருகன் தெரிவித்துள்ளார்.



அறிக்கையில் மேலும் கூறப்பட்டு உள்ளதாவது:

பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையில், 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற உணர்வை பிரதிபலிக்கும் உன்னத நிகழ்ச்சியான, காசி தமிழ் சங்கமத்தின் நான்காம் பதிப்பு துவங்குகிறது.

'தமிழ் கற்கலாம்' என்ற முழக்கத்துடன் நடக்கும் காசி தமிழ் சங்கமம், தமிழ் மொழியை நேசிக்கும் அனைவருக்கும் முக்கிய மையப் புள்ளியாகி உள்ளது.

தமிழ் கலாசாரம், தமிழ் மொழியின் பெருமையை, பாரத நாட்டின் மற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களும் தெரிந்து கொள்ள, இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

முதல் கட்டமாக, உ.பி., மாநிலம் வாரணாசியில் டிச., 2 முதல் 15ம் தேதி வரை, 'காசி தமிழ் சங்கமம் 4.0' நடக்கிறது. இதில், தமிழகத்தில் இருந்து ஏழு குழுக்கள் காசி வந்து, காசியின் பெருமையையும், தமிழகத்துடனான தொடர்பையும் அறிந்து கொள்வதுடன், ஆன்மிக அனுபவத்தையும் பெற உள்ளனர்.

இரண்டாம் கட்டமாக, தமிழகத்தில் டிச., 15 முதல், 31ம் தேதி வரை நடக்கும் நிகழ்ச்சி முக்கியமானது. வாரணாசியில் இருந்து 300 மாணவர்கள் தமிழகத்திற்கு வருவர். இந்த பயணத்தில், தமிழ் கலாசாரம், நாகரிகம் மற்றும் மொழியை அறிந்து கொள்வர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# சவுக்கு சங்கர் மீதான வழக்குகள்: ஐகோர்ட் உத்தரவுக்கு தடை

சென்னை, டிச.3-

சென்னை பிரபல யுடியூபரான சவுக்கு சங்கர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டு இருந்ததாவது:



பத்திரிகையாளராக என் பணியை தொடர முடியாமல் தமிழக போலீசார் இடையூறு செய்து வருகின்றனர். என்னைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பாக மாநில உள்துறை செயலர் மற்றும் போலீசிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த விவகாரத்தில் நிவாரணம் கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தேன்.

அந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் என்னுடைய கோரிக்கையும் தாண்டி சில உத்தரவுகளை பிறப்பித்து உள்ளது. குறிப்பாக என் மீதான வழக்குகள் அனைத்தையும் நான்கு முதல் ஆறு மாத காலத்திற்குள்ளாக விசாரித்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

புலன் விசாரணையில் உள்ள 13 வழக்குகளை நான்கு மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும், என் மீதான நிலுவையில் உள்ள 24 வழக்குகளை விசாரணை நீதிமன்றம் ஆறு மாத காலத்திற்குள்ளாக விசாரித்து முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இவை அனைத்தும் மனுவில் வைக்கப்படாத கோரிக்கை. எனவே, அதற்கு தடை விதிக்க வேண்டும்.

இந்த மனு, நீதிபதி தீபஸ்கர் தத்தா தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், இந்த மனு தொடர்பாக தமிழக அரசு பதில் அளிக்கவும் நோட்டீஸ் பிறப்பித்து, வழக்கை ஒத்திவைத்தனர்

# முதல்வர் பதவி குழப்பம் நீங்குமா? சிவகுமார் உடன் கருத்து வேறுபாடு இல்லை என்கிறார் சித்தராமையா

பெங்களூரு:. டிச.3-

பெங்களூரு:நாங்கள் இருவரும் 2028ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பயணிக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை என முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் முதல்வர் பதவிக்கு மோதல் நீடித்து வருகிறது. முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் சிவகுமார் ஆகிய இருவரது ஆதரவாளர்கள் போரக்கொடி தூக்கினர். இந்த சூழலில், இன்று (டிச.,02) சித்தராமையா, சிவகுமார் ஆதரவாளர்கள் இருவரும் சேர்ந்து காலை உணவு சாப்பிட்டுள்ளனர். இன்று சிவகுமாரின் அழைப்பை ஏற்று அவரது வீட்டுக்கு சித்தராமையா வருகை தந்தார். இவரும் ஒன்றாக அமர்ந்து காலை உணவு சாப்பிட்டனர். பின்னர் நிருபர்கள் சந்திப்பில் சித்தராமையா கூறியதாவது:

காலை விருந்து சிறப்பாக அமைந்தது. இந்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க இருவரும் விரும்புகிறோம். எங்கள் நோக்கம் தெளிவாக இருக்கிறது. உள்ளாட்சி தேர்தலே மிகவும் முக்கியம். இது தொடர்பாக நாங்கள் விவாதித்தோம். நாங்கள் இருவரும் 2028ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பயணிக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை.

காங்கிரசில் நாங்கள் ஒரே குரலாக இயங்கி வருகிறோம். கட்சியில் எந்த வித்தியாசமும் இல்லை. இது ஊடகங்கள் கிளப்பி விடுவது ஆகும். அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து காங்கிரஸ் உயர்மட்டம் முடிவு செய்ய வேண்டும். எதிர்காலத்திலும் நாங்கள் ஒன்றாக அரசை நடத்துவோம். எங்கள் அனைத்து எம்.எல்.ஏ.க்களும் ஒன்றுபட்டுள்ளோம், நாங்கள் ஒன்றாக எதிர்ப்பை எதிர்கொள்வோம். காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவை கடைபிடிப்பேன். அவர்களை சந்திக்கச் செல்வேன். இவ்வாறு சித்தராமையா கூறினார்.

# வணிக கப்பல் பயணம் தவிர்ப்பால் பாகிஸ்தானுக்கு நெருக்கடி: கடற்படை தளபதி அட்மிரல் திரிபாதி

புதுடில்லி, டிச.3-

''ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து ஏராளமான வணிகக் கப்பல்கள் பாகிஸ்தான் நாட்டிற்கு பயணிப்பதைத் தவிர்த்துள்ளதால், அந்நாட்டிற்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது'' என இந்திய கடற்படை தளபதி அட்மிரல் திரிபாதி தெரிவித்துள்ளார்.




இது குறித்து இந்திய கடற்படை தளபதி, அட்மிரல் திரிபாதி கூறியதாவது: ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை இன்னும் செயல்பாட்டில் உள்ளது. அது இன்னும் முடிவுக்கு வரவில்லை. பாகிஸ்தானுடனான விரோதப் போக்கைத் தொடர்ந்து கடந்த ஏழு எட்டு மாதங்களில் மேற்கு அரேபிய கடல் உள்ளிட்ட பகுதிகளில் போர் நடவடிக்கைக்கு இந்திய கடற்படை தயாராக உள்ளது.

மே மாதம் நடந்த ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது தனது படையின் ஆக்ரோஷமான நிலைப்பாடு. பாகிஸ்தான் கடற்படையை அதன் துறைமுகங்களுக்கு அருகில் இருக்க, இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியது. ஆப்பரேஷன் சிந்தூரின் போது உடனடி நடவடிக்கையை இந்திய கடற்படையின் போர்க் குழு மேற்கொண்டது.

இந்தியாவின் ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து ஏராளமான வணிகக் கப்பல்கள் பாகிஸ்தான் நாட்டிற்கு பயணிப்பதைத் தவிர்த்துள்ளது. இதனால் பாகிஸ்தானும் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் நாட்டின் கப்பல்களின் இன்சூரன்ஸ் செலவும் அதிகரித்துள்ளது. இவ்வாறு இந்திய கடற்படை தளபதி அட்மிரல் திரிபாதி தெரிவித்துள்ளார்.

# பழனிசாமியின் துரோகங்களுக்கு 2026ல் இறுதி தீர்ப்பு

திருமங்கலம், டிச,3-

''அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி செய்யும் துரோகங்களுக்கு, வரும் 2026 தேர்தலில் இறுதி தீர்ப்பு எழுதப்படும்,'' என அ.ம.மு .க., பொதுச்செயலர் தினகரன் தெரிவித்தார்.



மதுரை திருமங்கலத்தில் தினகரன் நேற்று அளித்த பேட்டி: பழனிசாமி முதல்வராக இருந்தபோது, 2017ல் தி.மு.க., கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தில், பழனிசாமிக்கு ஆதரவாக இருந்து அவரை முதல்வராக்கிய 18 எம்.எல்.ஏ.,க்களை பழனிசாமி நீக்கினார்.

தற்போது, கோபி தொகுதிக்கு சென்று, 'பதவியை ராஜினாமா செய்யும் முன், தொகுதி மக்களிடம் செங்கோட்டையன் கேட்டாரா?' என பழனிசாமி கேட்கிறார். அப்படி என்றால், 18 எம்.எல்.ஏ.,க்களை தகுதி நீக்கம் செய்யும்போது, அந்தந்த தொகுதி மக்களிடம் கேட்டாரா?

அ.தி.மு.க.,வில், தன்னைச் சுற்றி சில கைத்தடிகளை வைத்துக்கொண்டு, எம்.ஜி.ஆர்., கொண்டு வந்த சட்ட விதிகளை, தனக்கு சாதகமாக மாற்றினார்; அ.தி.மு.க., தொண்டர்களை கேட்டுத்தான் அவற்றை மாற்றினாரா?

துரோகத்திற்கு நோபல் பரிசு கொடுப்பதாக இருந்தால், பழனிசாமிக்கு தான் கொடுக்க வேண்டும் என செங்கோட்டையன் கூறினார்.

கடந்த 2017ல் இருந்து தற்போது வரை, பழனிசாமி செய்த துரோகங்களுக்கு, ஆண்டவன் தண்டனை வழங்கிக் கொண்டே இருக்கிறார். வரும் 2026 தேர்தலில், அவரது துரோகத்திற்கு இறுதி தீர்ப்பு எழுதப்படும்.

அ.தி.மு.க., என்ற கட்சியை இல்லாமல் செய்து, இரட்டை இலை சின்னம் கையில் இருக்கிறது என்ற அகம்பாவம், ஆணவம், பதவி வெறி, பணத்திமிரில் இருக்கும் பழனிசாமிக்கு, மக்கள் சரியான பாடம் புகட்டுவர். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தலில், அ.ம.மு.க., சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புபவர்கள் தங்களுடைய விருப்ப மனுக்களை, சென்னை அடையாறில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில், வரும் 10 முதல் 18ம் தேதி வரை பெறலாம்' என தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

## மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு டிஆர்ஓ உத்தரவு

திருவண்ணாமலை டிச.3-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை மனுக்களை வழங்கி வருகிறார்கள்.

அதன்படி நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக்கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதிகள், பிரதான் மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மைதுறை சார்ந்த பயிர்க்கடன்கள், புதியநீர் தேக்கதொட்டி அமைத்து தருதல், தாட்கோ மூலம் கடனுதவி, கூட்டுறவு சங்கங்களில் பயிர்கடன்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 256 மனுக்கள் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் பெண்கள், வயதானவர்கள், கைக்குழந்தை வைத்திருக்கும் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெறுவதோடு, பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு தீர்வுகாண அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின்படி நேற்று செய்யார் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 37 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 51 மனுக்களும் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து துறைச்சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அடுத்த தலைமுறையினர் தமிழ் கற்க முடியாத சூழல்

சென்னை, டிச.3-

தமிழை வளர்க் க, மத்திய அரசு என்ன செய்தது என, துணை முதல்வர் உதயநிதி கேட்கிறார். ஆனால், முதுநிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு எழுதிய 85,000 பேர், தமிழ் மொழி தேர்வில் தோல்வி அடைந்திருப்பது, தி .மு.க., ஆட்சியின் அலங்கோலத்தை காட்டுகிறது. தமிழை காட்டுமிராண்டி மொழி என குறிப்பிட்ட ஈ.வெ. ராமசாமியை வழிகாட்டியாக மார்தட்டிக் கொள்வோர், தமிழை வளர்ப்பது குறித்து எப்படி சிந்திப்பர்?



தமிழன் என்று சொல்வதை விட, திராவிடன் என்று சொல்வதையே பெருமையாக கொள்ளும் திராவிட மாடல் அரசியல்வாதிகளின் தமிழ் துரோகம், வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஆங்கிலத்தை புகுத்துவதன் வழியே, அடுத்த தலைமுறையினர் தமிழே கற் க முடியாத சூழ்நிலையை உருவாக்கி, தமிழை அழித்துவிட தி.மு.க., திட்டம் போட்டு பணியாற்றுகிறது



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து உலக எயிட்ஸ் தடுப்பு தினம் விழிப்புணர்வு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் கல்லூரி மாணவமாணவிகள். செவிலியர்கள் ஆகியோர் எடுத்துக்கொண்டனர்.



# ராதாபுரம் புதிய நீதிமன்ற கட்டிடத்திற்கு நிதி ஒதுக்க சபாநாயகர் அப்பாவுவிடம் வழக்கறிஞர்கள் கோரிக்கை

திசையன்விளை. டிச.3

நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் 2019 ம் ஆண்டு முதல் உரிமை யியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் இயங்கி வருகிறது. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான சமுதாய நலக்கூட கட்டிடத்தில் தற்காலிகமாக நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகாமையில் சர்வே எண் 461/1ஏ3 யில் 3 ஏக்கர் 60 சென்ட் இடம் நீதிமன்றம் மற்றும் நீதிபதி குடியிருப்பு கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது. தற்போது இயங்கி வரும் சமுதாய நலகூட கட்டிடம் மிகவும் சேதமடைந்து வருகிறது. ஆகவே புதிய நீதிமன்ற கட்டிடம் கட்டுவதற்கு போதிய நிதி ஒதுக்க வலியுறுத்தி ராதாபுரம்வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் வழக்கறிஞர் சங்க தலைவர் இசக்கியப்பன் தலைமையில் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு அவர்களை சந்தித்து மனு அளித்தனர். மனுவை பெற்று கொண்ட சபாநாயகர் விரைவில் நிதி ஒதுக்கி புதிய கட்டிடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கபடும் என்று உறுதி அளித்தார். இந்நிகழ்வில் அரசு வழக்கறிஞர் முத்துகிருஷ்ணன், ராதாபுரம் வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் கந்தசாமி வழக்கறிஞர்கள் அன்றன் செல்வகுமார், மனோராஜ், காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.




■ தேனி மாவட்டம், கைலாசப்பட்டி ஜீவன் ஜோதி நல மையத்தில் மாவட்ட எய்ட்ஸ் மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழி யினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தலைமையில் அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஏற்றுக்கொண்டனர்.




■ தேனி மாவட்டம், கைலாசப்பட்டி ஜீவன் ஜோதி நல மையத்தில் மாவட்ட எய்ட்ஸ் மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற எச்.ஐ.வி எய்ட்ஸ் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத்சிங், கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார்.



■ தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, உடுமலை கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்ன வீரன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 725 குழந்தைகளுக்கு திருக்குறள், வாய்ப்பாடு ,அகராதி ஆகிய புத்தகங்களை உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் தங்கராஜ் என்ற மெய்ஞான மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் இன்பக்கனி மற்றும் ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள். இதன் தொடர்ச்சியாக சின்ன வீரன்பட்டி ஊராட்சி அலுவலகம் எதிர்ப்புறம் திமுக கிளை கழக அலுவலகத்தை உடுமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் தங்கராஜ் என்ற மெய்ஞான மூர்த்தி திறந்து வைத்தார் .உடன் சின்னவீரன்பட்டி தனபால் வர்த்தக அணி ஒன்றிய துணை அமைப்பாளர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து தரவேண்டும் : மேயர் தினேஷ் குமார்

திருப்பூர், டிச.3-

திருப்பூர் மாநகராட்சி 60 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகள் பயன்பாடுகள் இல்லாத பாறை குழியில் கொட்டப்பட்டு வந்தது இதனிடையே பல்வேறு இடங்களில் பாறைக் குழிகளில் குப்பை கொட்டுவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த காரணத்தால், மாநகரத்தில் குப்பைகள் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில், மாநகராட்சி ஆணையர் அமித் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து மேயர் தினேஷ்குமார் நிருபர்களிடம் கூறியதாவது: மாநகராட்சியில் 60 வார்டுகளில் சேசுரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டமானது நடைபெற்றது. இதில் ஒவ்வொரு



வீடுகளிலும் பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இந்த ஒரு மாதம் அபராதம் இன்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். தொடர்ந்து பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அடுத்த மாதம் முதல் குப்பைகளை தரம் பிரித்து வழங்காத பொதுமக்களிடமிருந்து குப்பைகள் பெறப்படாது. அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகரில் குப்பைகள் தேங்கி கிடப்பதை எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது. அதற்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் வழக்கும் நீதிமன்றத்தில் இருப்பதால் அதனைப் பற்றி தற்பொழுது பேச முடியாது இடுவாய் பகுதியில் குப்பை கிடங்கு அமைப்பதற்கான நிலுவையில் இருப்பதால், அது தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்க முடியாது. ஆனால் இடுவாய் மக்களிடம் அது தொடர்பாக ஒவ்வொருவரிடமும் உரிய விளக்கம் அளிக்கப்பட்டது. இருப்பினும் ஒரு சிலரின் சுயலாபத்திற்காக போராட்டம் நடைபெறுவதாகவும் நீதிமன்ற தீர்ப்பு வந்தவுடன் இடுவாய் அங்குள்ள மக்களுக்கு உண்மையை தெரிவிப்பேன் என தெரிவித்தார்

# திருவண்ணாமலையில் தீபத்திருவிழாவின் 8ம் நாள் உற்சவம் குதிரை வாகனத்தில் சந்திரசேகரர் பவனி ஏராளமான பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை டிச.3-

திருவண்ணாமலை தீபத்திருவிழாவின் 8ம் நாள் உற்சவம் நேற்று நடந்தது. காலை சந்திரசேகரர் குதிரை வாகனத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்றுவருகிறது. இந்த விழாவின் 7ம் நாளான ஞாயிற்றுக்கிழமை பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் நடந்தது. இதில் 3வதாக மகாரதம் என அழைக்கப்படும் அண்ணாமலையார் தேர் தொடங்கியது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு அண்ணாமலையாருக்கு அரோகரா உண்ணாமலையம்மனுக்கு அரோகரா என பக்தி முழக்கமிட்டபடி மகாரதத்தை மாடவீதியில் இழுத்தனர். இதைத்தொடர்ந்து அம்மன் தேரை பெண்கள் மட்டுமே வடம் பிடித்து இழுத்தனர். அதனைத் தொடர்ந்து சண்டிகேஸ்வரர் தேரோட்டம் நடந்தது. இந்த தேரை சிறுவர் சிறுமியர் மட்டுமே தேரை வடம்பிடித்து மாடவீதியில் இழுத்தனர். ஞாயிற்றுக்கிழமை காலை 7.10 மணிக்கு தொடங்கிய தேரோட்டம் இன்று அதிகாலை



3 மணிக்கு நிறைவடைந்தது. தேரோட்டத்தை பக்தர்கள் விடிய விடிய தரிசனம் செய்தனர்.

இந்நிலையில் தீபத்திருவிழாவின் 8ம் நாளான நேற்று காலை அண்ணாமலையார் உண்ணாமலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்பட்ட மகாதீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து காலை உற்சவம் 11 மணிக்கு தொடங்கியது. திருக்கல்யாண மண்டபத்திலிருந்து விநாயகர் சந்திரசேகரர் சிறப்பு அலங்காரத்தில் 3ம் பிரகாரத்தை வலம் வந்து 16 கால் மண்டபத்தில் எழுந்தருளினர். அங்கு வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளிய விநாயகருக்கும் குதிரை வாகனத்தில் எழுந்தருளிய சந்திரசேகரருக்கும் சிறப்புபூஜைகள் நடந்தது.

இதைத்தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடு நடைபெற்றது. மாடவீதியில் திரண்டிருந்த ஏராளமான பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்தனர். மாலை 3.30 மணியளவில் அண்ணாமலையார் கோவில் கலையரங்கில் சமய சொற்பொழிவும் நடந்தது. 4 மணியளவில் தங்கமேரு வாகனத்தில் பிச்சானடர் மாடவீதியில் பவனிவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். நேற்று இரவு உற்சவத்தில் மூஷிக வாகனத்தில் குதிரை வாகனத்தில் வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியரும் பெரியகுதிரை வாகனத்தில் அண்ணாமலையார் பிரியாவிடையும் குதிரை வாகனங்களில் உண்ணாமலையம்மனும் சண்டிகேஸ்வரரும் பவனிவந்து அருள்பாலித்தனர். அப்போது மாடவீதிகளில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் திரண்டிருந்த பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். கோவில் மற்றும் கிரிவல பாதையில் ஆங்காங்கே ஆன்மீக அமைப்புகள் ஆசிரமங்கள் சார்பில் தீபத்திருவிழாவுக்கு வந்த பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# முதுமலை புலிகள் காப்பகம் தெப்பக்காடு பகுதியில் உள்ள லைட் பாடி பழங்குடியினர் குடியிருப்புகளில் ஐந்து குடியிருப்புகளுக்கு இலவச மின் இணைப்பு

நீலகிரி, டிச.3-

முதுமலை ஊராட்சிக்கு உட்பட்ட முதுமலை புலிகள் காப்பகம் தெப்பக்காடு பகுதியில் உள்ள லைட் பாடி பழங்குடி யினர் குடியிருப்புகளில் ஐந்து குடியிருப்புகளுக்கு நேற்று தமிழக அரசின் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் சந்தானநாயகிமுன்னிலையில் மின்வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டு வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கினர்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் பேசுகையில் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் குழுக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு தமிழ்




நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பாக நீலகிரி மின் பகிர்மான வட்டதில் மிகவும் பாதிக்கக்கூடிய பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இதுவரையிலும் 1005 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.தொடர்ந்து நேற்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் மசினகுடியை அடுத்த தெப்பக்காடு பகுதியில் உள்ள லைட் பாடி கிராமத்தில் ஏற்கனவே 105 வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, நேற்று மீதம் உள்ள 5 குடியிருப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. மொத்தம் 1010 வீடுகளுக்கு 38 லட்சம் ரூபாய் செலவில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பழங்குடியினர் குடியிருப்புகளில் மேலும் இத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவதுடன் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இங்குள்ள குடியிருப்பு வாசிகள் குடியிருப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்கு நன்றி தெரிவித்ததோடு மாவட்ட ஆட்சியரிடம் தங்களுக்கு வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேலும் மேம்படுத்தி தர வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் ,செயற்பொறியாளர்கள் சிவகுமார், முத்துக்குமார் (பொது) உதவி செயற்பொறியாளர் தமிழரசன், உதவி பொறியாளர் அப்துல் மஜீத், தெப்பக்காடு வனச்சரகர் சிவக்குமார் மற்றும் குடியிருப்பு வாசிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**CHANGE OF NAME**

I, K. SURESH ( Old Name ) ( Trasnfer Certificate ) S/o. B. Koori ( Old Name Trasnfer Certific ate ) Residing at 74/476, Kamtchi Nagar, Thottanuthu Post, VTC Balakrishnapuram, Dindigul - 624 005, here by declare that I have changed My name and Father name as SURESH, (New Name ) ( dhaar Card ) S/o. MUTHUKOORI ( New Name ) ( Adhaar Card ).

**பெயர் மாற்றம்**

நான், கே. சுரேஷ் (பழைய பெயர்) (டிராஸ்ன்ஃபர் சான்றிதழ்) த/பெ. பி. கூரி (பழைய பெயர் டிராஸ்ன்ஃபர் சான்றிதழ்) 74/476, காம்ட்சி நகர், தோட்டனூத்து அஞ்சல், வி.டி.சி பாலகிருஷ்ணபுரம், திண்டுக்கல் 624 005 என்ற முகவரியில் வசிக்கிறேன், எனது பெயரையும் தந்தை பெயரையும் சுரேஷ் (புதிய பெயர்) (ஆதார் அட்டை) த/பெ.. முத்துக்கூரி (புதிய பெயர்) (ஆதார் அட்டை) என மாற்றியுள்ளதாக இங்கே அறிவிக்கிறேன்.




■ உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, அன்று (01.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000